# வரும் 2040ஆம் ஆண்டுக்குள்

# கோலாலம்பூரில் 70% மக்கள் பொது போக்குவரத்துக்கு மாறுவர்



கோலாலம்பூர், ஜூன் 25-

வரும் 2040ஆம் ஆண்டுக்குள் கோலாலம்பூரில் 70% மக்கள் பொது போக்குவரத்துக்கு மாறுவார்கள் என்று கோலாலம்பூர் மாநகர மேயர் மைமுனா ஷாரிப் கூறினார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் பெருத்திட்டத்தின் அடிப்படையில் கோலாலம்பூர் ஒரு பசுமை நகராக மாற்றப்படும். சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு தூய்மைக் கேடு குறைக்கப்படும்.

மொத்தம் 191 திட்டங்கள் இதன் மூலம் வகுக்கப்பட்டுள்ளன. நகரின் வளர்ச்சிக்கேற்ப அதன் சிறப்பும் மேம்படுத்தப்படும் என்று நேற்று இங்கு அவர் அதுபற்றிய ஒரு விளக்க உரையில் கூறினார்.

இதில் முக்கியமாக கோலாலம்பூரை ஒரு பசுமை நகராக மாற்ற எல்.ஆர்.டி மற்றும் எம்.ஆர்.டி. போன்ற நிலையங்களுக்கு அருகில் மக்களுக்கான சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

வேலை செய்யும் கோலாலம்பூரில் வாழும் மக்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் கூட ஒரு பொழுது போக்கு இடங்கள் கொண்டு வரப்படும். ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள முறை கடைப்பிடிக்கப்படும்.

எம்.ஆர்.டி. 3 போன்ற திட்டங்கள் வரும் போது ரயில் போக்குவரத்து இன்னும் சிறப்பான நிலையை அடையும். பொதுமக்கள் 400 மீட்டருக்கும் குறைந்த இடைவெளியில் நடந்து சென்று பொது போக்குவரத்தை பயன்படுத்தும் நிலை ஏற்படுத்தப்படும்.

கடந்த மாதம் பேசிய துணை பிரதமர் ஜாஹிட் ஹமிடி நாட்டில் பொது போக்குவரத்தை 25% மக்கள் மட்டுமே பயன்படுத்துவதாக கூறியிருந்தார். எனினும் வளர்ச்சி திட்டங்கள் முடிவடையும் போது 70% மக்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்துவர் என்று மைமுனா தெரிவித்தார்.